## வகுப்பு : 8-ம் வகுப்பு

## பாடம் : தமிழ்

**இயல் - 1**

**சிறுவினாக்கள்:**

1. **தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.**
    - ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ வேண்டும்.
    - ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச்செய்து, புகழ் கொண்டது, தமிழ்மொழி.
    - எங்கள் தாய்மொழியாகிய அம்மொழி, உலகம் உள்ள வரையிலும் வாழ வேண்டும்.
    - பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் தமிழ்மொழியால் நீங்கித் தமிழ்நாடு ஒளிரட்டும்.
    - வானம்வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்லேும் வளரும் தமிழ்மொழி என்றென்றும் வாழ வேண்டும்.

2. **நம் முன்னோர் மரபுகளைப் பின்பற்றியதன் காணரம் என்னவாக இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**
    - நம் முன்னோர் எல்லா உயிர்களுக்கும் உரிய மரபுப்பெயர்களைச் சூட்டிப் பின்பற்றியிருக்கிறார்கள்.
    - இளமைப்பெயர்களையும், ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர் எனவும் பாகுபடுத்திக் குழப்பம் வராமலிருக்க மரபுகளைப் பின்பற்றியுள்ளனர்.
    - இருதிணை, ஐம்பால்களுக்கென்று உரிய சொற்களைப் பின்பற்றியதற்குப் காரணம் அவற்றை அடையாளப்படுத்துவதற்காகவே ஆகும்.
    - எளிதில் பொருள் புரிந்துகொள்வதற்காகவே முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியிருக்கிறார்கள்.
    - தமிழ்மொழியின் சிறப்பிற்காகவும் வளர்ச்சிக்காவும் மரபுகளைப் பின்பற்றியிருக்கிறார்கள்.

3. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

- ஓலைச்சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளி பெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.
- ஓலைச்சுவடிகளில் நிறுத்தற்குறிகளும் பத்தி பிரித்தலும் இல்லை.
- புள்ளி இடப்பட்டு எழுதப்படும் இடங்களில் புள்ளிகள் தெளிவாய்த் தெரியாத நிலையில், அவற்றின் இடம் நோக்கி, மெய்யா, உயிர்மெய்யா, குறிலா, நெடிலா என உணரவேண்டிய நிலை இருந்தது.
- இதனால் படிப்பவர்கள் பெரிதும் இடருற்றனர்.
- எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

4. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

- நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாய் இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுகின்றது.
- ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப் புள்ளிக்குப் பதிலாய் இக்காலத்தில் இணைக்கொம்பு (ை) பயன்படுகிறது.
- ஔகார உயிர்மெய்யை குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாய் இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுகிறது.
- குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின் மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டது.

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:** **5x1=5**

1. காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரி வடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன. தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும், செப்பேடுகளிலும் காணமுடிகிறது. கல்வெட்டுகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. செப்பேடுகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம்.

**வினாக்கள்**

அ) தமிழ் எழுத்துக்களின் பழைய வரி வடிவங்களை எங்கு காணலாம்?

ஆ) தமிழ் எழுத்துக்களை எவ்வகையாக பிரிக்கலாம்?

இ) கல்வெட்டுக்கள் ____________________ நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.

ஈ) எக்கலை தோன்றிய பின்னர் தமிழ் எழுத்துக்கள் நிலையான வடிவத்தைப் பெற்றன?

உ) ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைப்பன ____________________.

2. இவ்வுலகம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையாகும். இவ்வுலகில் தோன்றிய பொருள்கள் அனைத்தும் இந்த ஐம்பூதங்களின் சேர்க்கையால் உருவானவையே ஆகும். உலகத்துப் பொருள்களை இரு திணைகளாகவும், ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபு.

திணை, பால் வேறுபாடு அறிந்து, இவ்வுலகப் பொருள்களை நம் முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும். இம்மரபான சொற்களையே செய்யுளிலும் பயன்படுத்துதல் வேண்டும்.

தமிழ்மொழிச் சொற்களை வழங்குவதில் இம்மரபு மாறினால் பொருள் மாறிவிடும்.

**வினாக்கள்:**

1. பஞ்சபூதங்கள் யாவை?
2. தமிழரின் மரபு யாது?
3. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?
4. மரபுச் சொற்களை நாம் எதில் பயன்படுத்துதல் வேண்டும்?
5. ____________________ , ____________________ வேறுபாடு அறிந்து இவ்வுலகப் பொருள்களை நம் முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும்.

## கட்டுரை எண் - 1

## நான் விரும்பும் கவிஞர்

**முன்னுரை:**

நாட்டிற்காகவும், நாட்டு மக்களுக்காகவும் தம் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் இழந்த செம்மல்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், கவிஞர்கள், தொண்டுள்ளம் படைத்தவர்கள் எனப் பலர் இருக்கிறார்கள். அவர்களுள் நான் விரும்பிப் போற்றும் கவிஞர் மகாகவி பாரதியார் ஆவார்.

**பிறப்பும், இளமையும்:**

இவர் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டையபுரத்தில் 11.12.1882 இல் பிறந்தார். இவர் பெற்றோர் சின்னசாமி, இலக்குமி அம்மையார். பைந்தமிழ்ப் பாவலராய்த் திகழ்ந்து பாரதி என்னும் பட்டம் பெற்றார். இவர் சில காலம் எட்டையபுரம் அரசவைக் கவிஞராக விளங்கினார். பின்னர் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.

**விடுதலை வேட்கை:**

பாரதியார் தம் பாட்டுத்திறத்தால் தூங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி விடுதலைக் கனலை மூட்டினார். சூதிசமயப் பாகுபாடின்றி அனைவரையும் விடுதலை வேள்வியில் ஈடுபடச்செய்தார்.

**“ஆயிரம் உண்டிங்கு சாதி எனில்**
**அன்னியர் வந்து புகலென்ன நீதி”**

என வீரமுழக்கமிட்டார்.

**“பாருக்குள்ளே நல்ல நாடு”**

**“நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்”**

ஏன்றெல்லாம் பாடி மக்களுக்கு நாட்டுப் பற்றையும், விடுதலை உணர்வையும் ஊட்டினார்.

**சமுதாயத் தொண்டு:**

சாதிவேரை முளையிலேயே கிள்ளி எறிய விரும்பியவர் பாரதி. அதனால்தான், **‘குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்’** எனக் குழந்தை மனதில் ஆழப்பதித்தார் பாரதி. ‘மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்’ என்பதன் மூலம் பெண்கள் நலன் பேண விரும்பியவர் பாரதி.

**முடிவுரை:**

**‘பாரதநாடு பார்க்கெல்லாம் திலகம்’** எனப் பாடிய பைந்தமிழ்ப பாவலன் 11.09.1921 அன்று மண்ணுலகை விட்டு விண்ணுலகு அடைந்தார். அவர்வழி நாமும் நடந்து, நாடும் வீடும் போற்ற வாழ முயல்வோமாக!.